**இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் - 2020**

----------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை. | | | |
| (i) நிதிப் பிரமாணம் | நிறுவனத்திற்கு கிடைக்கப் | பொருள் கணிப்பீட்டுக் | பொருள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 454(1) | பெறும் பொருட்கள் பொது 44 படிவத்தில் உள்ள பொருட்கள் பதிவேட்டில் உடனடியாக பதிவு செய்யப்பட வேண்டிய போதும் பல்கலைக்கழகத்தின் 5 பிரிவுகளின் 54 பொருள் வகை தொடர்பான விபரங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை | குழு பரிந்துரையின் பிரகாரம் செயற்படுமாறு குறித்த பொருட் பதிவேட்டிற்கு பொறுப்பான சங்கைக்குரிய பிக்கு அவர்களுக்கு தெரியப் படுத்தியுள்ளதாக | கணிப்பீட்டுக் குழு பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 2014 ஆம் ஆண்டிலிருந்து வரும் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 8,838,624 தொகையான ஒப்பந்த நிறுத்தி வைத்தல் தொகை பெறுவோர் விசாரித்து பொறுப்பேற்றல் இல்லையாயின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குவதாக சில சந்தர்ப்பங்களில் உரிய விகிதங்களை வழங்குமாறு அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திடம் கோரிய போதும் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தினால் வழங்காதிருந்ததாக மற்றும் அதன் பிரகாரம் ஒப்பந்தக் காரரால் நிறைவேற்றப் பட்ட மேலதிக செயற்பாடுகளுக்காக அரச பொறியியலாளர் கூட்டுத்தாபத்தினால் இறுதிப் பட்டியல் சமர்ப்பித்ததன் பின்னர் அதனை தீர்வு செய்வதற்கு குறித்துக் கொண்டதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பந்தி | கடன் பணம் செலுத்தும் திகதி முதல் நிர்ணயிக்கப்பட்ட பணத்திற்காக வட்டி அறவிடப்பட வேண்டிய போதிலும் இலங்கை பிக்கு பல்கலைக் கழகத்தின் மூலம் ஊழியர்களுக்காக இடர், மோட்டார் வாகன, மோட்டார் சைக்கிள் மற்றும் கணனி கொள்வனவு என்பவற்றிற்காக வழங்கப்படும் கடன் முற்பணங்களுக்காக கடன் | அவதானிப்புடன் இணங்குவதாகவும் சம்பளத்தை தயாரிப்பதற்கு உரிய மென்பொருள் தயாரிப்பாளருடன் இது தொடர்பாக கலந்துரையாடி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | தாபன விதிக் கோவையின் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கிய திகதி முதல் வட்டி அறவிடப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் 4 ஆம் பிரிவு | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாத காலத்தின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது என்ஜின் தொடர்பாக பிரதான திருத்தவேலை யொன்றுக்கு பின்னர் ஆகிய செயற்பாடுகளுக்கு இடையே முதலாவது உருவாகும் சந்தர்ப்பத்திற்கு பின்னர் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ள வேண்டிய போதும் இலங்கை பிக்குபல்கலைக் கழகத்தின் ஒதுக்கப்பட்ட 02 வாகனங்கள் தொடர்பாக இறுதியாக எரிபொருள் பரிசோதனை 2017 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இரண்டு வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனைக்கு திகதி குறிப்பிடப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி | ஆராய்ச்சி படிகளை பெற்றுக்கொள்வதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களால் செயல் நடவடிக்கைத் திட்டம், ஆராய்ச்சி கிரயம் மற்றும் நடைமுறை உட்பட ஆராய்ச்சி முன்மொழிவொன்று ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 19 ஆராய்ச்சி முன் மொழிவுகள் தொடர்பாக அத்தேவைப்பாடு நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. | மேற்படி சுற்றறிக்கையின் இணைப்பு 01 மாதிரியின் பிரகாரம் மாத்திரம் ஆராய்ச்சி முன்மொழிவொன்றை பெற்றுக் கொள்வ தற்காக நடவடிக்கை எடுக்குமாறு குறித்த பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிறுவனத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக | நாட்டில் காணப்பட்ட கொவிட் வைரஸ் நிலைமை காரணமாக பல்கலைக்கழகம் அவ்வப்போது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| அறிமுகப்படுத்தப்பட் டிருந்த பொது முயற்சிகளுக்கான வழிகாட்டல் கோவையின் (Public Enterprises guidlines for good governess) 6.5.1 ஆம் பந்தி | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பிக்கு பல்கலைக்கழகத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் 07 மாதங்கள் தாமதத்துடன் 2021 ஒக்தோபர் 18 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மூடப்பட்டமை, பயணத் தடை விதிக்கப்பட்டமை போன்ற நிலைமையின் கீழ் வேலைக்கு வருகின்ற ஊழியர்களுக்கு சேவைக்கு அறிக்கையிட முடியாமையால் இத்தாமதம் ஏற்பட்டதாக | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 46,170,652 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 89,004,001 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 42,833,349 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த மீண்டெழும் மானியங்கள் ரூபா 26,900,000 ஆலும் புனரமைப்பு நிதிஏற்பாடு ரூபா 3,857,173 ஆலும் நானாவித வருமானம் ரூபா 2,300,087 ஆலும் அதிகரித்தமை மற்றும் வழங்கல் செலவினம் ரூபா 2,649,367 ஆலும் நானாவித மீண்டெழும் செலவினம் ரூபா ரூபா 2,854,666 ஆலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் ரூபா 3,151,118 ஆலும் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வள முகாமைத்துவம் தொடர்பான தகவல் தொழில்நுட்ப முறைமை (Enterprise Resource Planning) ஸ்தாபிப்பதற்காக ஒப்பந்தத்திற்காக தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களின் பிரகாரம் வெற்றிபெற்ற கேள்விதாரர் மென்பொருள் அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பாக இறுதி மூன்று ஆண்டுகளின் வருடாந்த புரள்வு ரூபா 50 மில்லியனை விஞ்சியிருக்க வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அத்தேவைப்பாட்டை பூர்த்தி செய்யாதிருந்த கேள்விதாரர் வெற்றிபெற்ற கேள்விதாரராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார். முழு ஒப்பந்த பெறுமதி ரூபா 8 மில்லியனான ஒப்பந்தம் உடன்படிக்கையின் பிரகாரம் 2018 மே 31 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறைமையிலுள்ள அனைத்து தவறுகளும் பூர்த்தி செய்யப்பட்டு 2022 முதலாவது காலாண்டில் இம்முறைமையை பல்கலைகக்ழகத்திற்கு கையளிப்பதற்கு ஒப்பந்தக்கார் இணங்கியிருந்தார். | பெறுகை நிபந்தனைகளுக்கு முரணாக வெற்றிபெற்ற கேள்விதாரரை தெரிவுசெய்தமை தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கும் சொத்துக்களை செயற்திறனாகவும் ஆக்கபூரவமாகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

எனினும் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 4 மில்லியன் அளவில் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் முறைமை வெற்றிகரமாக செயற்படு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மொத்த ஒப்பந்த பெறுமதி ரூபா 167,617,500 ஆன பதவியணியினர் உத்தியோகபூர்வ விடுதிகளை திட்டமிட்டு நிர்மாணித்தல் (Design & Building) ஒப்பந்தம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. 2021 மார்ச் 02 ஆந் திகதி வரையிலும் பகுதிக் கொடுப்பனாக ரூபா 149,415,025 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 1982 இன் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1978 இன் 94 ஆம் இலக்க சட்டத்தின் 8 (ஏ) பிரிவின் பிரகாரம் இந்நிர்மாணத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் நிர்மாணம் ஆம்பிக்கப்பட்டிருந்தது. | இக்கட்டிடம் திட்டமிட்டு நிர்மாணிப்பதன் கீழ் ஒப்பந்தக்காரருக்கு வழங்கியுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அனுமதி பெறல், கேள்வி நிபந்தனைகள் மற்றும் விலை அளவீட்டுப் பத்திரத்தின் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் மேற் கொள்ள வேண்டியதாகவும் அது தொடர்பாக அளவீட்டுப் பத்திரங்களில் கேள்வியாக அளிக்கப்பட்டுள்ள தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்படவில்லை என | நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2015 ஒக்தோபர் 16 ஆந் திகதிய SP/PCMD/6/2015 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம் அரச | இந்த உபகரணத்திற்காக ரூபா 830,750 தொகையை ஒப்பந்தகாரரிடமிருந்து | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொருத்தமான மற்றும் தரத்திற்கு இணங்க |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களுக்கு காற்றுச்சீராக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படும் போது எப்போதும் இன்வேடர் (Inverter) உடன்கூடிய உபகரணங்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் இதற்காக தயாரிக்கப்பட்டிருந்த கேள்வி ஆவணங்களில் அனைத்து மின் உபகரணங்களும் வலுச்சக்தியை சேமிக்க கூடியததாக (all electrical fittings shall Comply with "Energy Saving") இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அத்தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படாத 27 காற்றுச் சீராக்கி இயந்திரங்கள் வழங்கி பொருத்தப்பட்டிருந்தன. அத்தகைய 27 காற்றுச் சீராக்கி இயந்திரங்கள் கேள்விதாரரால் வழங்குவதற்கு இணங்கியிருந்த தரத்திற்கு இணங்காமையால் கேள்விதாரருக்கு ரூபா 1,053,000 ஆன விலை சாதகத்தை பெற்றுக் கொள்வதற்கு இயலுமாக இருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | கேள்வி ஆவணங்களின் பிரகாரம் Grohe, Plumber மற்றும் Hansgrohe ஆகிய பரிந்துரைத்த வியாபார பெயர்களுடன் கூடிய மலசலகூட உபபாகங்கள் வழங்கப்பட வேண்டிய போதும் அவ்வாறு பரிந்துரைத்த வியாபார பெயர்களுடன் இல்லாமல் Roncberg என்ற வியாபார பெயருடன் கூடிய உப பாகங்கள் வழங்கி பொருத்தப்பட்டிருந்தன. அந்த வியாபார பெயருடனான உப பாகங்களின் தரம் பரிந்துரைத்த வியாபார பெயர்களுடன் கூடிய உப பாகங்களின் தரத்திற்கு சமமானதென மதியுரை பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வகையின் சந்தை விலை மற்றும் ஒப்பந்தக்காரரால் வழங்கப்பட்டுள்ள வகையின் சந்தை விலைக்கு இடையே வேறுபாடு ரூபா 144,735 தொகையை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இடப்பட்டுள்ள உபபாகங்களின் தரம் தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொண்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (iv) | உடன்படிக்கை பிரகாரம் 2020 திசெம்பர் 19 ஆந் திகதி அளவில் இந்நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 02 ஆந் திகதி வரையிலும் வேலைகள் | ஒப்பந்தக்காரரின் இறுதிப் பட்டியலில் இருந்து தாமதக் கட்டணங்களை அறவிடுவதாக | உடன்படிக்கையில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 2015 ஒக்தோபர் 16 ஆந் திகதிய SP/PCMD/6/2015 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களுக்கு காற்றுச்சீராக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படும் போது எப்போதும் இன்வேடர் (Inverter) உடன்கூடிய உபகரணங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 76,635,875 ஆன வெளிநாட்டு மாணவர்களுக்காக மூன்று மாடி விடுதியொன்று திட்டமிட்டு நிர்மாணித்தல் (Design & Building) ஒப்பந்தத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த கேள்வி ஆவணங்களில் அனைத்து மின் உபகரணங்களும் வலுச்சக்தியை சேமிக்க கூடியதாக (all electrical fittings shall Comply with "Energy Saving") இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அத்தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படாத 25 காற்றுச் சீராக்கி இயந்திரங்கள் வழங்கி பொருத்தப்பட்டிருந்தன. அத்தகைய 25 காற்றுச் சீராக்கி இயந்திரங்கள கேள்விதாரரால் வழங்குவதற்கு இணங்கியிருந்த தரத்திற்கு இணங்காமையால் கேள்விதாரருக்கு ரூபா 1,515,000 ஆன விலை சாதகத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது. | ஆரம்ப சந்தர்ப்பத்தில் சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்த தாகவும் விலையில் வேறுபாடு ரூபா 959,375 தொகையை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொருத்தமான மற்றும் தரத்திற்கு இணங்க உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |